இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 04

**LLU4608– குற்றவியல் சட்டம்**

இறுதிப் பரீட்சை

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 18.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 08
ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "ஜனநாயக நாடு ஒன்றில் பாதுகாப்பு சமாதானம் மற்றும் நீதி என்பனவற்றை பேணுவதற்காக குற்றவியல் நீதி நிர்வாகம் தொடர்பில் ஒரு பலமான சட்ட ஏற்பாட்டை கொண்டிருத்தல் அவசியமானதாகும்."

   மேலுள்ள கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

   இலங்கையின் குற்றவியல் நீதி நிர்வாகத்திற்குள் முக்கிய நிறுவனங்களின் வகிபங்குகளையும் பொறுப்புடைமைகளையும் நுணுக்கமாக ஆராய்க.

   உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் உதாரணங்கள் என்பவற்றால் ஆதாரப்படுத்துக.

   (20 புள்ளிகள்)

2. டேவிட் எனும் ஆறாம் வகுப்பு மாணவன் ஒருவன் புத்தகக் கண்காட்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக காலியில் இருந்து புறப்படும் புகையிரத வண்டியில் காலை 9.30 மணிக்கு தன் தாய் ரோசியுடன் ஏறினான். புகையிரத வண்டியில் அவர்கள் இருவரும் அருகருகே அமருவதற்கு இருக்கைகள் காணப்படாத காரணத்தால் இருவரும் பிரிந்து வெவ்வேறு இருக்கைகளில் அமர்ந்தனர். இதன் பின்னர் டேவிட் ரோசி உதவி கேட்டு அலறுவதை கேட்டான். அவ்விடத்திற்கு விரைந்து சென்ற போது ஒரு நபர் ரோசியின் கழுத்தில் கத்தி ஒன்றை சுட்டிக் காட்டி அவளது தங்க மாலையை பறிக்க முயலுவதை கண்டான். ரோசி அவளது கையில் இருந்த பையினால் அவனை தாக்கியதுடன் அவன் கீழ் நழுவி விழுந்து அவனது தலை காயமுற்றது. ஆயின் அவன் மீண்டும் எழுந்து ரோசியை நோக்கி கத்தியுடன் ஓடினான். இதனால் பயமுற்ற டேவிட் அங்கிருந்த இரும்பு பட்டையொன்றை (Iron bar) எடுத்து அவனது தலையை தாக்கினான். இச்சம்பவத்திற்குப் பின்னர் டேவிடும் கடுமையாக காயமடைந்து நினைவிழந்தான். அவன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அவனிற்கு அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டுமென வைத்தியரொருவர் பரிந்துரை செய்தார். ரோசியின் அனுமதி இல்லாமல் டேவிட்டின் மீது சத்திரசிகிச்சை ஒன்றை மேற்கொண்ட வைத்தியர் அவனது கால்களை மருத்துவரீதியாக நீக்கினார். தங்கமாலையை திருடுவதற்கு முற்பட்ட அந்த நபர் சில மணி நேரத்தின் பின்னர் இறந்தார்.

மேலுள்ள சந்தர்ப்பத்தில் டேவிட், றோசி மற்றும் வைத்தியர் ஆகியோருக்கு கிடைத்தகு பொதுவான விடுபாடுகள் குறித்து ஆராய்க. உமது விடையை நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பனவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

3. "கொலை மற்றும் ஆட்கொலை (Culpable Homicide) என்பனவற்றிற்கு இடையிலான கருத்தளவிலான வேறுபாடானது இவ்விரு குற்றங்களினதும் குற்றமனதில் தங்கியுள்ளது. இதற்கு இணங்க எண்ணத்தின் வேறுபட்ட கூறுகளின் தரம், இரு குற்றங்களினதும் அறிவு மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நபரின் செயலால் இறப்பு ஏற்படக்கூடிய நிகழ்தகவு என்பன இவ்விரு குற்றங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை உருவாக்குகிறன."

மேலுள்ள கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

அ. கொலையின் வகைப்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ. கொலை மற்றும் ஆட்கொலை என்பனவற்றின் குற்றமனதின் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(15 புள்ளிகள்)

4. டானி என்பவன் நகரிலும் புற நகர்களிலும் ஆடையகங்களின் ஒரு வலையமைப்புக்கு சொந்தக்காரரான செல்வந்த வர்த்தகர் ஆவார். அவர் நகரில் இருந்த கடையிலும் பிற கடைகளிலும் பெருந்தொகையான வேலையாட்களை பணிக்கமர்த்தியிருந்தார். அவருடைய பதின்மூன்று வயது மகன் நகரின் ஒரு பிரபல்யமான பாடசாலையில் கல்வி கற்கிறான். பொதுவாக அச்சிறுவன் பொதுப்போக்குவரத்து வசதியை பயன்படுத்தி பாடசாலைக்கு செல்கிறான்.

ஒரு நாள் தொலைபேசி அழைப்பொன்றை பெற்ற டானி தொலைபேசி அழைப்பாளன் அவர் ஒரு மில்லியன் ரூபாவை வழங்காத போது பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் போது அவரது மகனை ஆட்கடத்தக்கூடும் என்று தெரிவித்தான். மேலும் அழைப்பாளன் இதனை பொலிசிற்கு தெரிவிக்க வேண்டாம் என எச்சரித்ததுடன் அவ்வாறு தெரிவிப்பின் மகனுடைய வாழ்க்கைக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் கூறினான்.

மகனின் பாதுகாப்பு குறித்து கருத்திற் கொண்ட டானி தனது நம்பிக்கைக்குரிய வேலையாளான லால் மூலம் ஒரு மில்லியன் ரூபாவை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தான். தொலைபேசி அழைப்பாளன் தெரிவித்தவாறு அவனுடைய முகவருக்கு லால் பணம் அடங்கிய பையைக் கையளித்தான். தொலைபேசி அழைப்பாளனின் முகவர் அப்பகுதியின் மிகப் பிரபல்யமான குண்டர் ரவுடி ராணா என்பவன் என லால் இனங்கண்டான்.

மேலுள்ள சந்தர்ப்பங்களில் அநாமதேய தொலைபேசி அழைப்பாளன் மற்றும் அவனது முகவர் ஆகியோர் ஏதேனும் குற்றத்தை இழைத்துள்ளனரா என அறிந்து கொள்ள டானி விரும்புகிறார்.

அவரிற்கு அறிவுறுத்துக.

உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டம் என்பனவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

5. பின்வரும் சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொள்க.

அ. சுனில் என்பவரால் சொந்தம் கொள்ளப்பட்ட ஆடையகத்தில் பியல் பணியாளனாக பணியாற்றுகிறான். சுனில் இரு வார வெளிநாட்டு விடுமுறைக்கு சென்றிருந்தார். அவர் இல்லாத போது ஆடையகத்தையும், அதன் கொடுக்கல் வாங்கல்களையும் பாதுகாப்பதற்கு பியலுக்கு நம்பிக்கை மீது பொறுப்பு வழங்கப்பட்டு இருந்தது. சுனில் ஏலவே வழங்கியிருந்த் ஆடைகளுக்கு பணமளிக்க வேண்டியிருந்த கொள்வனவாளர்களிடமிருந்து பணத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அவன் அறிவுறுத்தப்பட்டிருந்தான். சுனில் நாடு திரும்பியவுடன், அவரிற்கும் பியலிற்கும் இடையிலான உடன்படிக்கையின் வாசகங்களை மீறி கொள்வனவாளரிடமிருந்து பெற்ற சில பணத்தொகையை பியல் தன் சொந்த கணக்கிலக்கத்தில் வைப்பிட்டிருந்தான் என்பதை கண்டறிந்தார்.

(10 புள்ளிகள்)

ஆ. சுரேஸ் என்பவன் இலங்கையின் பிரபலமான ஒரு சட்டக்கல்லூரியின் இறுதியாண்டு சட்ட மாணவன் ஒருவன் ஆவான். அவன் கல்லூரிக்கு செல்லும் போது பாதையில் 50,000 ரூபாவைக் கொண்ட பணப்பை ஒன்றை கண்டான். அப்பணப்பையை எடுத்துக்கொண்டு தனது நண்பர் குழுவினருடன் அருகிலிருந்த உணவகத்திற்கு சென்ற அவன், மதிய உணவிற்கு 25,000 ரூபாவைச் செலவிட்டான். அவனது நண்பன் ஒருவன் இப்பணம் குறித்து கேள்வி எழுப்பிய போது, அவன் தான் அதனை பாதையில் கண்டெடுத்ததாகவும், தான் எவரிடமும் இருந்து திருடாத காரணத்தினால் எவ்வித குற்றத்தையும் இழைக்கவில்லை என வாதிட்டான்.

பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பனவற்றால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(10 புள்ளிகள்)

6. "கொள்ளை (robbery) என்பது திருட்டு (theft) மற்றும் வன்பறி (extortion) என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டுக் குற்றமாகும்."

மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? ஆராய்க.

(20 புள்ளிகள்)

7. நில்மினி எனும் பதினைந்து வயதுடைய மாணவி தனியார் வகுப்பறையில் இருந்து தன் வீட்டிற்கு ஒரு நாள் திரும்பிக்கொண்டிருந்தாள். அவள் வழியில் இரண்டு வருடங்களுக்கு மேலாக அவள் காதல் உறவொன்றில் உள்ள இளம் இருபது வயது காதலனான சுரேன் என்பவனைச் சந்தித்தாள். அவன் இரவு உணவை அருந்துவதற்காக அவளை அழைக்க அவளும் இணங்கினாள். உணவுப்பட்டியலை அவள் பார்வையிட்டுக் கொண்டு இருந்த போது சுரேன் ஒரு பழச்சாறு நிரம்பிய குவளையை அளித்தான். இது குறித்து அவள் விசாரித்த போது அவளின் சுவைக்கு ஏற்ப விசேடமாக அருகில் இருந்த பழச்சாறு கடையில் அதனை அவன் வாங்கியதாக சுரேன் கூறினான்.

பழச்சாறை அருந்திய நில்மினி போதை மயக்க நிலையை அடைந்தாள். அவளுடன் இரவு உணவை அருந்திய சுரேன் அவளை அருகில் இருந்த ஹோட்டல் ஒன்றிற்கு அவளிற்கு சிறிய ஓய்வு தேவைப்படுவதாகக் கூறி அழைத்துச் சென்றான். நில்மினி சுரேனுடன் ஹோட்டலுக்கு செல்ல இணங்கினாள். ஹோட்டலில் தன்னை கொஞ்ச ஆரம்பித்த சுரேனிற்கு நில்மினி எந்தவித மறுப்பையும் தெரிவிக்கவில்லை. அதன் பின்னர் சுரேன் அவளுடன் உடலுறவு கொண்டான்.

வீடு திரும்பிய அவள் தன் தாயிடம் ஹோட்டலில் நடந்த சகலவற்றையும் தெரிவித்ததுடன் ஹோட்டலில் அவள் சிறிய நித்திரையில் இருந்த போது நடந்தது குறித்து அவள் முழுமையாக அறிந்திருக்கவில்லை எனவும் கூறினாள்.

எவ்வாறாயினும் அவளது குடும்ப வைத்தியரால் சோதனை செய்யப்பட்ட போது நில்மினியின் தாயிற்கு அவள் பலாத்காரம் செய்யப்பட்டு உள்ளாள் என தெரிவிக்கப்பட்டது.

சுரேனிற்கு எதிராக பொலிசில் முறையீடு ஒன்று செய்யப்பட்ட போது அவன் ஹோட்டலில் நடந்த சகலவற்றிற்கும் நில்மினி சம்மதித்திருந்தாள் என வாதிட்டான்.

22ஆம் இலக்க 1995ஆம் ஆண்டின் குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் (திருத்தப்பட்டவாறு) திருத்தத்திற்கு அமைய புதிய பாலியல் வன்புணர்வு சட்டத்தின் கீழ் மேலுள்ள சம்பவத்தை ஆராய்க.

(20 புள்ளிகள்)

8. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் <u>இரண்டினை (02)</u> மீது சிறுகுறிப்பு எழுதுக.

அ) சித்தசுவாதீனமின்மை (Insanity)

ஆ) அவசியத்துவம் (Necessity)

இ) விபத்து (Accident)

ஈ) குற்றவியல் தண்டனைச்சட்ட கோவையின் பிரிவு 294 இற்கு உள்ள தண்டனை தணிப்பு வேண்டுகை (Mitigatory pleas attached to the Section, 294 of the Penal Code)

(20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -